Registered as a News Paper in Ceylon
P. M. G. No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ஆ (1889) ஆவணி 23உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது

தனிப்பிரதி: சதம் 10

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-சூகூ] யாழ்ப்பாணம்:- ஏவிளம்பி௵ ஆடிமீ கஅ உ வெள்ளிக்கிழமை (2 AUGUST. 1957) [இல-௩௭]

## பிரதமர் — சமஷ்டிக் கட்சி பேச்சு முடிபு

### பலரும் பலவிதமாய் அபிப்பிராயப்படுகின்றனர்

**சேர். கந்தையா வைத்தியநாதன்**

சமரச உடன்படிக்கை வரவேற்கத்தக்கது. அது கையாளப் படுவதிலேயே அதிகம் தங்கியிருக்கின்றது. இதை நாம் பொறுத்திருந்தே பார்க்கவேண்டும். நல்லெண்ணத்தின் அடிப்படையிலேயே இந்தச் சமரச உடன்படிக்கை ஏற்பட்டிருக்கின்றதென்பதை எவரும் மறுக்க முடியாது: முதல் மந்திரியோ சமஷ்டிக் கட்சியினரோ தங்கள் கொள்கையை விட்டுக் கொடுக்காமலே சமரசம் ஏற்படுத்தியுள்ளனர். இதைவிடச் சிறந்த முடிவு காணலாமெனச் சிலர் கூறினபோதிலும் பிரச்சினைகளைப் படிப்படியாகத் தீர்க்கலாமென்பதை உணர்ந்திருத்தல் வரவேற்கத்தக்கது.

**போராசிரியர் கலாநிதி**

**ஸ்ரீ சி. ஜே. எலியேசர்**

தமிழரசுக்கட்சிக்கும் முதல் மந்திரிக்குமிடையே ஏற்பட்ட ஒப்பந்தமானது எந்தச் சமுகமும் அதன் சொந்த நாட்டில் அடிமைப்பட்டிராத அமைப்பை நிறுவச் சமாதான முறையில் உழைப்பதற்கு இரண்டாவது சந்தர்ப்பத்தை நல்கியுள்ளது.

**வண. கலாநிதி டி. ரி. நைல்ஸ்**

மக்கள் சமாதான முறையில் ஒற்றுமையாக வாழ்வதற்கு இப்போது ஏற்பட்டுள்ள ஒப்பந்தம் மற்றெரு சந்தர்ப்பத்தை நல்கியுள்ளது.

**திரு எம். பாலசுந்தரம்**

தமிழரசுக்கட்சி செய்த உடன்படிக்கையைக் கண்டிப்பது உகந்ததல்ல. தமிழ் மக்களின் நன்மைக்காக தங்கள் நேரத்தில் ஒரு விநாடியையாவது அல்லது தங்கள் பணத்தில் ஒரு சிறு பகுதியையாவது தியாகஞ் செய்யாத சிலர் கண்டனத்துக்கு முன்வந்திருப்பது அதிசயத்தைக் கொடுத்தது. இவ்வறிக்கை தற்காலிகமானதே. தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையிலுள்ள பிணக்குகளைத் தீர்க்க இது வழிவகுக்கும் என்று நான் நம்புகிறேன்.

**ஸ்ரீ பீற்றர் கெனமன்**

முதல் மந்திரிக்கும் தமிழரசுக்கட்சிக்குமிடையே ஓரளவு உடன்பாடு ஏற்பட்டுள்ளது. அதை நாம் மனமுவந்து வரவேற்கின்றோம்.

**திரு ஜீ. ஜீ. பொன்னம்பலம்**

தாம் செய்துகொண்ட ஒப்பந்தத்தில் தமிழுக்குச் சமத்துவமோ அரசாங்கமொழி உரிமையோ இருப்பதாக திரு. செல்வநாயகம் பொதுமேடையில் என்னுடன் வந்துவாதிப்பாரா? அப்படி வாதிட்டு அந்த உரிமை இருப்பதாக நிரூபித்தால் நான் எனது பிரதிநிதிப்பதவியைத் துறக்க ஆயத்தமாயிருக்கிறேன். நம்மொழிக்கு ஏற்பட்ட இவ்வவமானத்தைச் சந்ததி சந்ததியாக எதிர்ப்போம். உரிமை இழந்து வீணே வாழ்வதைவிட மாளுதல் மேலானது. அவர்கள் செய்த ஒப்பந்தம் தமிழ் இனம் முழுவதையும் கட்டுப்படுத்தாது. ஆகவே உங்கள் எதிர்ப்பைத் தொகுதியாகக் காட்டுங்கள்.

**திரு எஸ். ஏச். பேரின்பநாயகம்**

மொழி உரிமைப் போராட்டத்தை நாம் கைவிட்டால் நாம் நமது சுயமரியாதையை இழப்பதாகும். எனவே தாய்மொழி சம்பந்தமான முடிவைத் தமிழ் மக்கள் நிராகரித்துவிட்டு மேலும் கிளர்ச்சி செய்து உரிமையைப் பெற வேண்டும். கிளர்ச்சி எத்தகையதாக இருக்கவேண்டும் என்பதைப்பற்றி இப்பொழுது எதுவும் கூற நான் விரும்பவில்லை.

**திரு சி. சுந்தரலிங்கம்**

உங்களுடைய நான்கு கேள்விகளில் ஒரு பகுதிக்காவது அல்லது ஒரு பிரிவுக்காவது நீங்கள் பிரதம மந்திரியுடன் செய்த உடன்படிக்கை எந்தச் சலுகையையாவது அளித்திருக்கிறதா என்பதைப்பற்றி உண்மையாகவே அறிய விரும்புகின்றேன். திருக்கோணமலை மகாநாட்டிலே நீங்கள் செய்த தீர்மானத்திலுள்ள நான்கு கேள்விகளையும் கைவிட்டுச் சரணாகதியடையச் செய்துவிட்டீர்களென்பதை மீண்டும் கூறுகிறேன்.

மேற்சபை அங்கத்தவர்

**திரு. பி. நாகலிங்கம்**

சமஷ்டிவாதிகள் தங்களுடைய ஆவணிப் போராட்டத்தைக் கைவிட்டது எல்லோருக்கும் மகிழ்ச்சி அளித்திருக்கின்றது. என்றாலும் முதல் மந்திரியுடன் செய்த ஒப்பந்தம் இலங்கையின் ஐக்கியத்தைச் சீர்குலைத்து விட்டதென்றே யாழ்ப்பாணத்தில் உள்ள தொழிலாளரும் விவசாயிகளும் மாணவரும் கருதுகின்றனர்.

**ஒப்பந்தம்பற்றி நீதிபதி ஸ்ரீ சி. நாகலிங்கம்**

தமிழரசுக் கட்சியும் முதல் மந்திரியும் செய்த ஒப்பந்தம் தமிழருக்கோ - சிங்களவருக்கோ வெற்றியென்றோ தோல்வியென்றோ சொல்ல முடியாது. ஒப்பந்தம்பற்றி நான் திருத்திக்குமேல் திருத்தியடைகிறேன்.

## வில்லுப் பாட்டுக் குழுவினர் வருகை

சமீபத்தில் திருப்புத்தூரில் நடைபெற்ற திருமுறை விழாவில் திருப்பெருந்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களால் பொன்னுடை போர்த்து "வில்சொல் கலைஞன்" என்ற சிறப்புப் பெயர் அளிக்கப்பெற்றவரும் தெல்கி, பம்பாய், கல்கத்தா முதலிய வடஇந்தியப் பரதேசங்களிலும் சென்று அருள் நெறியையும் சமய நெறியையும் புதிய முறையில் நல்ல பக்கவாத்தியங்களின் உதவியுடன் வில்லுப்பாட்டின் மூலம் பரப்பி வருபவருமாகிய வில் இசைவேந்தன் கலாநிதி **ச. பா. பிச்சைக்குட்டி** அவர்கள் தமது குழுவினருடன் கொழும்பில் நடைபெறும் ஆடிவேல் விழாவை முன்னிட்டு திருப்பெருந்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் ஆசிகளுடன் ஈழம் வருகின்றார்கள்.

குறித்த குழுவினர் ஆடிவேல்விழா நிகழ்ச்சியை முடித்துக் கொண்டு ஈழநாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று பக்திப் பாடல்களைக் கொண்டு வழிபாட்டினுககுரிய புண்ணிய சரித்திரங்களான 'பார்வதி கல்யாணம்' 'வள்ளி திருமணம்' 'பிட்டுக்கு மண்சுமந்தகதை' முதலிய நிகழ்ச்சிகளை வில் இசையுடன் பாடி அதற்கு விளக்கமும் கூறி வில்லுப்பாட்டு இசை நிகழ்ச்சி நடாத்துவார்கள்.

குறித்த வில்லுப்பாட்டுக் குழுவினரை அழைத்து நிகழ்ச்சியை நடாத்த விரும்புவோர் **"அருள்நெறி" நீர்வேலி** (P.O.) என்ற விலாசத்துக்கு எழுதி ஒழுங்கு செய்துகொள்ளலாம்.

நேயர்கள் நெஞ்சம்

## மாசி உத்திரமே திருவள்ளுவர் திருநாளாகும்

### ஐந்தாங்குருபரன் ஆறுமுகநாவலர் ஆய்ந்து கண்ட உண்மை

### அந் நாளிற் கொண்டாடி அருள்பெறுவோம் எல்லீரும் வாரீர்

வந்ததோர்விந்தை. அது வம்பானதால் அல்லல் பெருகிடத் தொல்லை மிகுத்திடத் தொடர்புற்றூர் விலகிடச் சந்து பொந்துகளில் மூலை முடுக்குகளிலுள்ளாரும் வெறுத்திட ஓடி மறையுதாம் வைகாசி அனுஷம்.

கொழும்பு தமிழ்மறைக் கழகத் தலைவர் பண்டிதர் வித்துவான் திரு. கா. பொ. ரத்தினம் M. A.; B. O. L. அவர்கள் தனக்குத் "திருவள்ளுவ நாயனார் குருபூசைத்தினம் எதுவென்று தெரியாது என்றும், தான் திருநெல்வேலி தென் இந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தலைவரைக் கேட்டு வைகாசி அனுஷமெனத் தெரிந்துகொண்டதாயும், அதனை மறைமலையடிகள் ஏற்றிருந்தார் என்றும் [illegible] மேலானதென்றும் வாயில் வந்தவாறெல்லாம் பேசிப் பற்பல பத்திரிகைகளிலும் துண்டுப் பிரசுரங்களிலும் அதிபாதகமாந் தொழிலை துணிந்து வெளியிட்ட அத்தனையும் எத்தனையோ துண்டு துண்டுகளாய்த் தொலைந்து போய் விட்டன என்பதை 21-6-57 5-7-57 இந்துசாதனப்பத்திரிகைகளில் அறிவானுன்ற அறிஞர்கள் இனிதாய் விளக்கியிருக்கின்றார்கள்- அவர்களுக்கு என் வணக்கம் உரித்தாகுக.

தமிழ்மறைக் கழகத்தலைவ ஐய! மாற்றங்கட்கெல்லாம் அஞ்சாதநெஞ்சமுடையார் நூற் பதிப்புக் கழகத்தார் என்பதை இன்னுமோர் எடுத்துக் காட்டால் நுங்கட்கு விளக்குகின்றேன். அவர்கள் சைவப் பஞ்சாங்கம் என ஒன்று வெளியிட்டு வருகின்றனர். அதில் எத்தனையோ மாற்றங்கள் செய்து வருகின்றனர். அவர்கட்கு எத்தனையோ நியதிகள் எடுத்தோதினும் கொண்டதைவிடாது குதர்க்க வாதமே குறித்து வருகின்றனர். வரவிருக்கும் விளம்பி வருஷம் புரட்டாதி மாதம் 27உ கொள்ள வேண்டிய நவராத்திரிவிரத ஆரம்பத்தை ஆவணி மாதம் 28ந் தேதியே கொள்ள வேண்டும் என்றும், ஐப்பசி மாதம் 26உ கொள்ளவேண்டிய திருகந்தர் சஷ்டி விரதாரம்பத்தைப் புரட்டாதி மாதம் 27ந் தேதியே கொள்ள வேண்டும் என்றும் குறிக்கப்போகின்றனர். இது அவர்களின் நீண்ட காலப் பழக்கம். அதனை யாம் அறிந்திருப்பதால் அவர்கள் வருங் காலங்களில் குறிக்கவிருக்கும் பிழைபெறும் விரத காலக் குறிப்புகளை முன்னரே விளக்கி அவர்களைத் தெருட்டி வருதல் எமது பழக்கம். இத்தன்மையரான நூற்பதிப்புக் கழகத்தார் உங்கட்குப் போதித்த வைகாசி அனுஷத்தை நீங்கள் தலைமேற் கொண்டு இன்னும் நடந்தால் அதனால் ஆவதழிவது எமக்கு யாதொன்றுமில்லை. ஐய! திருவிளையாடற் புராணத்தில்,

நலமலி விரத நோற்பத்
தொடங்குநாள் நவில்வாந்
தேளிற்
சிலையினி லாத லன்றி
யிரட்டிய தெரிசஞ் சேர்ந்த
மலமதி யொழித்து மற்றை

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKSA PRESS

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

ஏவிளம்பி ஸு ஆடி மீ கஅ உ வெள்ளிக்கிழமை


## பயன் படுமா?

பிரதம மந்திரியாரும் சமஷ்டிக் கட்சித் தலைவர்களும் நடத்திய சமரசப் பேச்சுகளின் பயனாக உத்தேசிக்கப் பெற்ற சத்தியாக்கிரகம் கைவிடப்பட்டதென்ற முடிபு யாவருக்கும் ஆறுதலை அளித்திருக்கின்றதெனினும் அதன் விளைவாகத் தமிழ் மொழியினதும் இனத்தினதும் எதிர்கால நிலைமையென்ன என்பதைப்பற்றி இருதிறத்தவர்களும் ஒருங்குசேர்ந்து வெளியிட்ட உடன்பாட்டறிக்கை தெளிவான விளக்கத்தைக் காட்டவில்லை என்று பலர் எண்ணுகின்றார்கள். சுருங்கச் சொல்லும் வகையிலமைந்த இந்த உடன்பாட்டறிக்கை தமிழ் பேசும் மக்களுக்குச் சமரசப் பேச்சுகள் விளைவித்திருக்கும் நயங்களை மயங்க வைத்துரைக்கின்றபடியால் இம்முடிபைப்பற்றித் திட்டவட்டமாக இப்பொழுது ஒன்றும் கூறுதல் முடியாது. அன்றியும் இம்முடிபுகளைச் சட்ட திட்டங்களாக்குவதற்கு ஆறு மாத காலம் ஆகும் என்று செய்திகள் கூறுகின்றன.

பொருள் நுணுக்கத்தைச் சொல்லாட்சி பொருத்தமாக்குவதும் விபரீதப்படுத்துவதும் அரசியல் உடம்படிக்கையிற் பொதுவாகக் காணப்படுவது வழக்கம். இலங்கையிலுள்ள ஒரு தேசிய சிறுபான்மைச் சமுகத்துக்குரிய மொழி தமிழ் என்று, சிங்களத்துடன் தங்கள் மொழிக்குரிய சமவரிசையை எவரும்கவர்ந்துவிட முடியாதென்றும் அவ்வாறு யாரும் முயன்றால் அதனை ஆணித்தரமாக எதிர்ப்போம்என்றும் அறுதியிட்டுக் கூறிவரும் தமிழ் பேசும் மக்களுக்கு, சமஷ்டிக் கட்சியும் பிரதமரும் உடன்பட்டிருக்கும் ஒப்பந்தம் எடுத்துக் காட்டுவது மயங்க வைக்கும் சொல்லாட்சியின் பாற்பட்டதாயிருக்கின்றது. நிர்வாகத்துக்குரிய மொழிக்கும் ஆட்சி மொழிக்கும் உள்ள வேற்றுமையென்ன என்பதையும் இந்த உடம்படிக்கை விளக்கிக் காட்டவில்லை.

பிரதேச சபைகளின் அமைப்பைப் பற்றிக் கூறுமிடத்துப் பாராளுமன்றத்தின் அதிகாரத்துக்குள் அது அடங்கியிருப்பதாகக் கருத்துத் தோன்றுகின்றது. தனிச் சிங்களச் சட்டத்தை உருவாக்கிய அதே பாராளுமன்றம் பிரதேச சபையை ஆக்கவும் கூட்டவும் குறைக்கவும் அழிக்கவும் அதிகாரம் பெற்றிருக்கின் அச்சபைகள் அடையவிருக்கின்ற சுய நிர்ணய உரிமை யாது என்ற கேள்வியும் எழுகின்றது. வேறும் ஒன்றுள்ளது. வடமாகாணம் ஒரு பிரதேசசபையாகவும் கிழக்கு மாகாணம் ஒன்றுக்குமேற்பட்ட பல சபைகளாகவும் பிரிக்கப்படுவதற்கும் கல்லோயாப் பகுதியின் நிலைமை ஆலோசிக்கப்படவேண்டியிருப்பதற்கும் நெருங்கிய தொடர்புண்டென்றே எண்ணுவதற்கு இடம் இருக்கின்றது. அதைவிடப் பிரதேச சபைகளின் ஆட்சியெல்லையை வரையறுப்பதற்கும் காலத்துக்குக் காலம் அல்லது சந்தர்ப்பத்துக்கேற்ற விதம் எல்லை மாற்றம் நடைபெறுவதற்கும் உடம்படிக்கை இடங்கொடுக்கின்றதே. இத்தகைய விபரீதங்களையெல்லாம் உற்றறிந்து தெளிவு பெறுவதற்குப் பிரதேசச் சட்டதிட்டம் உருவாகாதிருக்கின்றது. ஆறு மாதங்களுக்குள்ளே அத்திட்டம் வெளி வரலாம் என்று கருதப்படுகின்றது. எனவே இந்த உடம்படிக்கை வெள்ளையா, கறுப்பா, விரும்பத்தக்கதாகுமா, வெறுப்பை விளைவிக்குமா என்று இப்பொழுது சொல்லுதல் முடியாது.

அயல் நட்புரிமை பூண்டு சம வரிசை பெற்றுப் பல நூற்றாண்டுகளாக வாழ்ந்து வந்த இனங்கள், இப்பொழுது வீணை வித்திடப் பெற்றிருக்கும் வேற்றுமை விளைந்து தீவினை விளைக்காவண்ணம் தடுப்பதற்கு சமரசப் பேச்சு வழி காட்டும் எனினும் உரிமைகளைப் பொறுத்த வரையிற் சமரச முடிபுகள் எப்பொழுதும் ஆராயப்படவேண்டியனவாகும். தமிழ்மொழி, தமிழ் இனம் என்ற இவ்விரு உரிமைகளையும் தமிழ் மக்கள் கைவிட மாட்டார்கள். ஆகையால் எந்தவிதமான முடிபுகளும் இடைக்கால நடைமுறைகளும் அடிப்படை உரிமைகளைப் பாதிக்காத வண்ணமாய் அமைதல் வேண்டும் என்று மீண்டும் எடுத்துக் காட்டுகின்றோம். பிரதமரின் விரிவான விளக்கத்தையும் பிரதேசசபை தமிழ் மொழி உரிமை ஆகியவற்றைப்பற்றிய சட்ட திட்டங்களையும் எதிர்பார்த்திருக்கும் வகையில் அமைந்துள்ளது எங்கள் அபிப்பிராயம்.

# சைவம் வளர்த்த சிவபாத சுந்தரனார்

## ஆடி 17-ந்திகதி (1-8-57ல்) குருபூசை

—0—0—

ஸ்ரீ செ. கோவிந்தசாமி அவர்கள்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சற்குருநாத சுவாமிகள் தன்னிற் பிறகு சைவ சமயம் எவ்வித நிலைமையில் இருக்குமோ என்றெண்ணி மனம் கலங்கினர். என்னைப்போல் எத்தனையோ கல்விமான்களும் எத்தனையோ சன்மார்க்கர்களும் முன்வருவார்கள். ஆனால் கைமாறு கருதாது சைவத் தொண்டாற்றுவதற்கு ஒருவரும் முன்வரமாட்டார்கள் எனக் கூறினர்.

பரமபதியாகிய பரமசிவனார் நாவலர் ஐயாவுக்குப் பின்னும் ஒரு சைவத் தொண்டரை யாழ்ப்பாணத்திற்குத் தந்தார். அவரே புலோலிச் சுப்பிரமணியதொண்டரின் அருந்தவப் புதல்வர் ஸ்ரீமத் சிவபாத சுந்தரனார் அவர்களாவர், அன்னாரின் இளமைக் காலத்தில் ஆங்கிலமோகம் மேல் நாட்டு நாகரிகம் ஆதியனதாண்டவமாடின. கிறீஸ்தவ பாதிரிமார்கள் தம் மதத்தைப் பரப்புவதற்குச் சைவப் பிள்ளைகளையெல்லாம் தம்மதம் புகச் செய்தனர் இந்த நிலைமையில் சைவம் இருப்பதைக்கண்ட திரு. சிவபாதசுந்தரனார் மிக்க இளமையிலே பட்டம் பதவிகளை விரும்பாது மேல்நாட்டுநாகரீகம் உணவு உடை ஆதியனவற்றையெல்லாம் உதறித் தள்ளி ஸ்ரீலஸ்ரீ நாவலர் ஐயாவழியை நாடினர்.

நாவலர்வழிவந்த இப்பெரியார் ஆசிரியத் தொழில் ஏற்றுச் சைவப்பணிசெய்ய முன்வந்தார்கள். இதனால் மாணவர்கள் பலரும் விரும்பும் நல் ஆசானுமாயினர். சைவ நூல்களையெல்லாம் ஒன்றன் பின் ஒன்றாக வெளியிட்டார்கள். அதன் பயனாகச் சைவசித்தாந்தச் சைவப் பாடசாலை எங்கணும் பரவியது. கிறிஸ்தவர்கள் செய்யும் மதமாற்றத்தைச் சகிக்கமாட்டாதவராய்ப் பல கண்டனநூல்களை எழுதி வெளியிட்டார். எதையும் தர்க்க ரீதியோடு கண்டித்துத் தங்கருத்தை நிலை நாட்டும் பேராற்றலும் படைத்தவர். இதனால் படித்தவர் எவரும் இவரோடு உரையாடுவதற்கு அஞ்சுவர். சேர். பொன் இராமநாதன், திருமயிலை சே. வெ. ஜம்புலிங்கம் பிள்ளை, திருச்சி கோ. இராசகோபால பிள்ளை, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சிதம்பரம் இலக்கணம் முத்துக் குமாரசுவாமிகள் தருமபுராதீனம் ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் முதலானோர் இவருடைய ஆப்த நண்பர்களாயிருந்தனர். இவரது சைவ சித்தாந்த அறிவையும் அதனைப் போதிக்கும் திறமையையும் உணர்ந்த ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரத்தம்பிரான சுவாமிகள் இச் சைவப் பெரியார்போல் இந்தியாவிலும் இல்லை இலங்கையிலும் இல்லை என ஒரு நூல் முகவுரையிற்கூறியுள்ளார்.

இவர் சைவசித்தாந்தத்தைப் பரப்புவதற்காகத் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை, கொழும்பு சைவமங்கையர் கழகம் திருசிராப்பள்ளி ஆனந்த வாசமாளிகை திருமயிலை சே. வே. ஜம்புலிங்கம் பிள்ளை இல்லம், கந்தவனக் கடவை, திருக்கேதீச்சரம் ஆதியாம் இடங்களில் சித்தாந்த வகுப்புகள் வைத்து நடாத்தியும் போதனைகள் புரிந்தும் பலருக்கும் பாடம் சொல்லியும் வந்தார்கள். தாம் வெளியிட்ட நூல்களிற் சிலவற்றைச் சைவ பரிபாலன சபைக்கும் விவேகானந்தசபைக்கும் உரிமை அளித்துள்ளார்கள். சிவபாத சுந்தரனார் பல வருடங்களாகக் கந்தவனத்தில் ஒரு குடில்அமைத்து அதிலிருந்து சுப்பிரமணியப்பெருமானும் பரம்பொ

தொடர்ச்சி 5-ம் பக்கம்

### கதிர்காமம் தீர்த்தம்

ஆடி 11ந் திகதி வெள்ளிக்கிழமை (26—7—57) கதிர்காம உற்சவம் ஆரம்பமாயது. ஆடி 26ந் திகதி சனிக்கிழமை(10-8-57) தீர்த்தோற்சவம் நடைபெறும்.

### வண்ணை வைத்தீஸ்வரன் தேர்

வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் தேர்த்திருவிழா ஆடி 14ந் திகதி திங்கட்கிழமை (29-7-57) வழக்கம் போற் சிறப்பாக நடைபெற்றது.

# துறந்தார் பெருமை

## திருவள்ளுவநாயனர் புகட்டும் பல சிறப்புக்கள்

ஸ்ரீ சி. கணேசலிங்கஐயர்
— தெல்லிநகர் —

முற்றத் துறந்து, முதற்பொருளைச் சிந்தித்து நிற்பவரே முனிவர் என்று சொல்லப்படுவர். அம் முனிவரது பெருமை அளவிடற்கரிது. இத்தகைய பெருமை வாய்ந்த முனிவரைப்பற்றி வள்ளுவர் பெருமான் வளம்பெற விளக்கியுள்ளார். அப் பகுதியின் முதலாம் பாடலில் தமது நிலைக்குரிய ஒழுக்கத்தினின்றும் தவறாது துறந்தவர்களே மேலானவர்களென நூல்கள் செப்புமென்றும் இரண்டாம் பாடலில் இருவகைப் பற்றினையும் விட்டாரது பெருமை இவ்வளவென்று அளவிட முடியாதென்றும் அங்ஙனம் அளவிட முற்படின் இவ்வுலகத்தின் கண் பிறந்து இறந்தவரை எண்ணி அறிய முயன்றாற் போலுமென்றும் கூறியுள்ளார், அப்பாடல்கள்;

"ஒழுக்கத்து நீத்தார்
பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவற்றுணிவு"
"துறந்தார் பெருமை
துணைக்கூறின் வையத்
திறந்தாரை யெண்ணிக்
கொண் டற்று,"

மூன்றாவதுபாடலில் பிறப்பு வீடு என்னும் இரண்டினது துன்பவின்பக் கூறுபாடுகளை ஆராய்ந்து அறிந்து அப்பிறப்பை நீக்குதற்கு இப்பிறப்பின் கண்ணே துறவறத்தை மேற்கொண்டவரது பெருமையே உலகின் கண் மேலானதென்றும் நான்காம் பாடலில் திண்மையென்னும் தோட்டியால் ஐம்பொறிகளாகிய யானைகளைத் தத்தம் புலன்கள் மேற் செல்லவிடாது காப்பவனே எல்லா நிலத்திலும் மேலானதென்று சொல்லப்படும் வீட்டு நிலத்திற்கு ஓர்சிறந்த வித்தை இட்டவனாவானென்றும் கூறியுள்ளார் அக்குறட் பாக்களைச் சற்று நோக்குவாம்

"இருமை வகைதெரிந்
தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற்றுலகு"
"உரனென்னுந் தோட்டியா
னோரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்பிற்
கோர் வித்து"

ஐந்தாவது பாட்டில் புலன்கள் மேற்செல்லுகின்ற ஐந்து அவாவினையும் அடக்கினவனது வலிமைக்கு அகன்ற வானத்துள்ளார் தலைவனாகிய இந்திரனே சான்றாக அமையுமென்றும், ஆறாவது பாடலில் ஒத்த பிறப்பினராய மக்களுள் செய்தற்கரியவற்றைச் செய்பவர் பெரியவராவாரென்றும் அங்ஙனம் அரியவற்றைச் செய்யாது எளியவற்றைச் செய்பவர் சிறியரென்றும் கூறப்பட்டுள்ளது. அவற்றைச் சிறிது நோக்குவோமாக.

"ஐந்தவித்தா னாற்ற லகல்
விசும்பு ளார்கோமா
னிந்திரனே சாலுங் கரி"
"செயற்கரிய செய்வர்
பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்"

ஏழாம் பாடலில் தன் மாத்திரைகளாகிய சுவையும் ஒளியும், ஊறும் ஓசையும், நாற்றமுமென்று சொல்லப்படும் ஐந்தினது கூறுபாட்டையும் ஆராய்வானது அறிவின் கண்ணதே உலகமென்

தொடர்ச்சி 5 ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பில் தமிழரசு மகாநாடு

—:o:—

## ஒப்பந்தம்பற்றி விளக்கங்களும் ஏற்கவேண்டிய நியாயங்களும்

—o—

### இலங்கை இந்தியர் நிலைமையும் மலைநாட்டுத் தமிழர்களின் வாக்குறுதிகளும்

ஊர்வலங்கள் மூலம் ஒருபால், யந்திர உந்துவண்டிகள் மூலம் ஒருபால் புகையிரதமூலம் ஒருபாலாய்ப் பல்லாயிரக் கணக்கில் மக்கள் வந்து திரண்டனர் மட்டக்களப்பு நகரத்தில். மங்கையர் பகுதி, தொழிலாளர்பகுதி, அரசியற் பகுதி என்பனவாய் நடந்தன மகாநாடுகள்.

இவற்றுள் மங்கையர் மகாநாடு முன்னிடம் பெற்றதுபோலவே அம் மகாநாட்டில் மங்கையர் முன்னிடம் பெற்றனர்.

தமிழ்மக்களின் உரிமைப் போர் இன்னமும் முடிவடையவில்லை. இப்பொழுது ஒரு சிறிது பெற்றுள்ளோம். அது எங்கள் இலக்காயமைந்த ஒன்றல்ல இப்பொழுது செய்த உடன்பாடு ஓர் இடைக்காலச் சமாதான ஒழுங்காகவே கொள்ளப்படுகின்றது என்று ஸ்ரீமதி என். அருணாசலம் அவர்கள் பேசும்போது கூறினர்.

உடன்பாட்டை ஆதரித்து மேற் செய்ய வேண்டியதைக் குறிப்பிட்டுச் சனநாயக தொழிலாளர் மகாநாட்டுச் சார்பாகப் பேசினர் ஸ்ரீமதி கோகிலம் சுப்பையா அவர்கள்.

**தொழிலாளர் மகாநாட்டில் தொண்டமான்**

இலங்கைத் தொழிலாளர் மகாநாட்டுத் தலைவர் திரு. எஸ். தொண்டமான் தமிழரசுக் கட்சித் தொழிலாளர் மகாநாட்டிற் பேசும்போது இந்த நாட்டிலுள்ள தமிழ் மக்களுக்குத் துன்பம் நேருமானல் உயிரைத் தியாகம் செய்தாயினும் உரிமைப் போராட்ட முன்னணியில் நின்று போராடுவேன்; தமிழர்களின் உரிமைகளைப் பெறுதற்கு நான் அங்கத்துவம் வகிக்கும் தாபனமும் என்னுடன் முன் நிற்கும். இப்பொழுது அரசாங்கத்துடன் தமிழரசுக்கட்சிசெய்த உடன்பாடு இலாபமானதாகும். பிரசா உரிமைபற்றித் தீர்மானஞ் செய்யப்படவில்லை, ஆயினும் பிரசா உரிமைப் போராட்டத்தைக் கைவிடவில்லை என்று திரு. வன்னியசிங்கம் அறிக்கையிற் குறிப்பிட்டதை நாம் நம்புகின்றோம். மலைநாட்டுத் தமிழர்களின் அரசியல் பொருளாதார சமூக நலன்களில் தமிழரசுக் கட்சி கவனம் செலுத்தவேண்டும். சமஷ்டிக் கட்சிக்கு எங்கள் ஆதரவு எப்பொழுதுமிருக்குமென்று உறுதி கூறவிரும்புகின்றேன் என்று குறிப்பிட்டார்.

திரு. வி. கே. வெள்ளையனும்பேசினர். தமிழரசுக் கட்சி தங்களுடன் கலந்து தங்கள் உரிமைகளைப்பெறப் போராடுமென்று நம்புவதாக அவர் குறிப்பிட்டார்.

**அரசியல் மகாநாட்டில் விளக்கங்கள்**

முதல் மந்திரிக்கும் தமிழரசுக் கட்சிக்குமிடையில் நடந்த பேச்சுக்கள் பற்றியும் செய்யப்பெற்ற தீர்மானங்கள்பற்றியும் ஆராய்ந்தபின் அத்தொடர்பில் வேண்டிய பிரேரணைகள் அரசியல் மகாநாட்டில் நிறைவேற்றப்பெற்றன.

**பிரேரணைகளின் சாரம்**

(1) இலங்கையில் ஓர் சமஷ்டி ஆட்சி முறை அமைக்கவேண்டும்; சுயநிர்ணய உரிமையுள்ள தமிழ் இராச்சியம் அல்லது இராச்சியங்கள் அதில் இடம்பெறவேண்டும்என்ற கேள்விகளை இம் மகாநாடு மீட்டும் வலியுறுத்துகின்றது.

(2) இலங்கை முழுவதிலும் தமிழ்மொழிக்குச் சிங்களத்துடன் சமஅந்தஸ்திருக்க வேண்டுமென்பதை இம் மகாநாடு மீட்டும் வலியுறுத்துகின்றது.

(3) இந்நாட்டைத் தாயகமாகக் கொண்ட தமிழ் பேசும் மக்களுக்குப் பூரண பிரசா உரிமை அளிக்கும் முறையிற் பிரசாஉரிமைச் சட்டங்கள் திருத்தியமைக்கப்படவேண்டுமென்பதை இம் மகாநாடு மீட்டும் வலியுறுத்துகின்றது.

**இடைக்காலஒழுங்காயுள்ள ஒப்பந்தம்**

அரசாங்க ஆதரவில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் சிங்கள மக்கள் குடியேற்றப்படுவது தீவிரமாகத் தடை செய்யப்படும். தேசிய சிறுபான்மையினரின் மொழி என்ற முறையில் தமிழ் மொழிக்கு உத்தியோக ரீதியான அங்கீகாரம் அளிக்கப்படும்; வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் மொழி உத்தியோக மொழியாயிருக்கும். மத்திய அரசாங்கத்துடன் கருமங்களைத் தமிழ்மொழியில் நடத்துதற்கு இலங்கையின் எல்லாப் பகுதிகளிலுமுள்ள தமிழ் மக்களுக்கும் உரிமையுண்டு; தலசுயாட்சி விரிவான அடிப்படையில் இருக்கும் முறையில் பிராந்தியசபைகள் நிறுவப்படும்; என்பனவாய் வரும் நியாயங்களால் முதல் மந்திரிக்கும் தமிழரசுக் கட்சிக்குமிடையில் ஏற்பட்ட ஒப்பந்தத்தை ஓர் இடைக்காலச் சமரச ஒழுங்காக மகாநாடு ஏற்றுக்கொள்ளுகின்றதென்றும் ஆகையினலே ஆவணி 20ந்திகதி தொடங்கவிருந்த சத்தியாக்கிரகம் கைவிடப்படுகின்றதென்றும் மகாநாட்டில் தீர்மானஞ் செய்யப்பெற்றது.

**தீண்டாமை ஒழிக்கும் திட்டம்**

தமிழ் மக்களிடையே ஒற்றுமை உண்டாக்கும் பொருட்டுத் தீண்டாமை ஒழிப்பு இயக்கமொன்று நடத்துவதாகவும் அதை நடத்தும்பொழுது ஆன்ம சுத்திக்குச் சத்தியாக்கிரகம்கையாளப்படலாமென்றும் மகாநாட்டில் தீர்மானஞ் செய்யப்பெற்றது.

---

வட்டக்கொடை தமிழ்முன்னேற்றச்சங்கத் தாபகருக்கு

## பிரியாவிடை

தமிழ் முன்னேற்றச்சங்க தாபன கர்த்தாக்களில் ஒருவராகிய திரு. எஸ். சிவரத்தினம் கைப்புக்கொலைத் தோட்டத்திலிருந்து மாறி இடிக்கோயா பகுதிக்குப் போவதை முன்னிட்டு அன்னருக்கு மேற்படிசங்கம் ஓர் சிறப்பான பிரியாவிடைக் கூட்டம் சென்ற ஞாயிற்றுக்கிழமை மாலை நடாத்தியது.

கூட்டம் தேவாரத்துடனும் பாஷைப் பிரச்சினைப் பேச்சு வெற்றிகரமாக முடியவேண்டும் என்ற பிரார்த்தனையுடனும் ஆரம்பமாகியது.

சங்கத்தலைவர் திரு. அ. சபாபதிப்பிள்ளை தலைமை வகித்துப் பேசுகையில் எங்கள் பிரச்சினைகள் எல்லாம் தீரும்நாள் கிட்டிவிட்டது. பெரும்பான்மை மக்களின் பேராதரவைப் பெற்ற எங்கள் பிரதமர் கட்டாயம் சமாதான முறையில் தீர்த்து வைப்பார். இவ்வண்ணம் தீருங்கால் அவர் செல்வாக்கு இலங்கையில் மாத்திரம் அல்லது பிற நாடுகளிலும் உச்சநிலை யடையும்.

எங்கள் சங்கத்தின்நோக்கம் சமூக சேவை செய்தலும் தமிழ்க்கலை கலாசாரம் வளர்த்தலுமே. அரசியலில் ஈடுபட எங்களுக்கு அதிகாரமில்லை இதற்கிணங்க இப்பகுதி மக்களுக்கு சமய உணர்ச்சி உண்டுபட திரு. எஸ். சிவசிவரத்தினம் பல தொண்டுகள் ஆற்றியுள்ளார். கூட்டுப் பிரார்த்தனை இயக்கம் இப்பகுதியில் அவராலேயே பரப்பப்பட்டதுஎன்று கூறினர்.

திரு. எஸ்.தம்புசாமி, திரு. என். மார்க்கண்டு ஆகியோரும் திரு சிவரத்தினம் அவர்களின்சேவைகளைப்பாராட்டிப்பேசினர்.

இச்சங்கப் பொருளாளர் திரு. செ. இராசநாயகம் சங்கச் சார்பில் அழகிய வெள்ளிக்கிண்ணங்கள் நான்கு அன்பளிப்பாகக் கொடுத்தார். பின்பு திரு. ஆர். தாமோதரம் முதலிய பலர் பேசினர். சங்கக் காரியதரிசி திரு. வே. சிவலிங்கம் இச்சங்கத்தை விட்டுப் பிரியும் திரு. எஸ். சிவரத்தினம் மீண்டும் தம் சங்கத்தில் நடக்கும் விழாக்களுக்கு வந்து உதவி புரியுமாறு வேண்டிக்கொண்டு அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

**திவ்வியசீவன சங்கத்தில்**

பூண்டலுஓயாப் பகுதியில் உள்ள கைப்புக்கலைத் தோட்டப் பிரதம இலிகித

தொடர்ச்சி 4-ம் பக்கம்

---

## மாவிட்டபுரத்திற் சைவப்பிரசங்கம்

—o—

### கிரியைகள் எல்லாம் பக்தியை வளர்ப்பனவாதல் வேண்டும்

19—7—56 வெள்ளிக்கிழமை மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் 18-ம் திருவிழாவிலன்று இரவு அபிஷேக ஆராதனை தம்ப பூசை முதலியன நடந்த பின்பு சைவப் பெரியார் திரு. மு. ஞானப்பிரகாசம் அவர்கள் தலைமையில் கூட்டுப்பிரார்த்தனையும் சைவப் பிரசங்கமும் நிகழ்ந்தன. திரு. மு. மயில்வாகனம் அவர்கள் சைவக்கிரியைகள் என்னும் பொருள் பற்றிச் சொற்பொழிவாற்றினர்.

“ஒரு சைவனுக்குக் கிரியைகள் அவன் தாயின் கருப்பத்தில் உற்பவித்த காலந்தொடக்கம் மரணபரியந்தம் நடைபெறுகின்றன, இறந்தபின்னும் அவன்பேரால் கிரியைகள் நடைபெறுகின்றன. முந்தியவையைப் பூர்வக் கிரியைகள் என்றும் பிந்தியவையை அபரக்கிரியைகள் என்றும் அழைப்பர். இவ்விடத்தில் அவற்றைப்பற்றி விரிவாகப்பேசுதல் இயலாது. சில பூர்வக் கிரியைகளைப்பற்றி முக்கியமாக ஆலயங்கள் சம்சந்தமானவைபற்றிய சிலவார்த்தைகள் பேசலாமென நினைக்கிறேன்.

கிரியைகள் எல்லாம் ஞானம் உதித்தற்கு நிமித்தமாகவுளளன என்று எங்கள் சமயசாத்திரங் கூறும். மாணிக்கவாசக சுவாமிகளுக்கு வித்தியாரம்பஞ் செய்தார்கள் என்று கூறுமிடத்து சிவ மணமும் தவமணமும் திருநீற்றின் தன் மணமும் பெறக் கல்விச் செல்வியை மணஞ் செய்தார்கள் எனக் கடவுள் மாமுனிவர் கூறியது நோக்கற்குரியது. கல்வியாகிய பெண்ணை, சிவமணம் தவமணம் திருநீற்றின் மணம் ஆகிய புத்திரர்களைப் பெறுமாறு திருவாதவூரடிகளுக்கு திருமணஞ் செய்தார்கள் பெற்றார்கள் என்பதை நோக்குமிடத்து கல்வியின் நோக்கம் எதுவாகவிருக்க வேண்டுமென்பது இனிது புலப்படும்.

இத்தேவாலயம் மிகவும் புனிதமானது. திசஉக்கிர சோழராசாவால் முதலில் கட்டப்பட்டது. அவனுடைய மகள் மாருதப்புரவல்லி இங்குள்ள முருகப் பெருமானை வழிபட்டுத் தனது குதிரைமுகம் நீங்கப் பெற்று மனித முகத்தைப் பெற்றாளெனப் பழைய சரித்திரங்கள் கூறுகின்றன. இங்குள்ள முருகப் பெருமானைத் தொழுதலினல் நாங்களும் எங்களுடைய விலங்குக் குணங்களைப் போக்கித் தெய்வப் பண்புகளைப் பெறலாம். இத்தேவாலயத்தின் மகா மண்டபச் சபா மண்டபத் திருப்பணி முதலியன வைரக் கற்களால் செய்ய ஆரம்பித்துக் குறையிலிருக்கின்றன. இத்திருப்பணிக்குத் தேவையான பணத்தைச் சைவாபிமானிகள் கோயிலதிகாரிகளுக்கு உதவ முன்வரல்வேண்டும்.

கோவில்களில் நடக்கின்ற கிரியைகள் உற்சவங்கள் எல்லாம் பக்தியை வளர்க்கக்கூடியதாக இருக்க வேண்டும். பக்தி வளர்ச்சிக்கு முரணான கிரியைகள் உற்சவங்கள்எல்லாம் விலக்கப்படவேண்டும் என்று அவர் பேசும்போது கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாணந்துறை சைவமகாசபை

—0—

பாணந்துறைச் சைவ மகாசபையின் ஏழாவது வருடாந்தக்கூட்டம் பாணந்துறைக் கந்தசுவாமி கோயில் மடத்தில் தலைவர் திரு. வி. துரைசிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

ஸ்ரீ இஸ்பென்சர் இராசரத்தினம் அவர்கள் சபை செய்த சேவைகளைப் பாராட்டிப் பேசினர். அறிக்கைகள் வாசித்துஏற்கப்பெற்ற பின்பு புது வருட உத்தியோகத்தர் பின் வருமாறு தெரிவு செய்யப்பெற்றனர்.

தலைவர்: திரு. வி. துரைசிங்கம், உப தலைவர்கள்: வைத்தியகலாநிதி கே. நித்தியானந்தன், திரு. எஸ். கே. முருகேசு, திரு. இ. சுப்பிரமணியம், திரு. எஸ். சி. தியாகராசா, திரு. வி. முத்துநாடார்.

செயலாளர்கள்: திரு எஸ் இராமலிங்கம், திரு. எஸ் வல்லிபுரம். உதவிச் செயலாளர்கள்: திரு எஸ். தங்கத்துரை, திரு. கே. இராசரத்தினம்.

பொருளாளர் திரு. ஆர். எம். கறுப்பன் செட்டியார் உதவிப் பொருளாளர்கள்: திரு. வி. எஸ்.பூபாலன் திரு. எஸ். இராசரத்தினம்.

கணக்குப்பரிசோதகர்கள் திரு. வி. கணேசையர் திரு. திரு. எஸ் சிவசுப்பிரமணியம்: மேலும் 13 பேர் நிருவாகசபை உறுப்பினராய்த் தெரிவு செய்யப்பெற்றனர்.

# உயிர் வாழ்க்கையின் இரகசியம்

—:o:—

## அருட் செயலிற் காண வரும் அதிசயங்கள்

—0—0—

உலகிலுள்ள எல்லாப் பொருள்களும் தாமே இயங்கத்தக்கவாறு முழுமுதற் கடவுள் ஒழுங்குபண்ணியிருக்கிறார். அவர் குறுக்கிடவேண்டிய தேவை இடையிடையே உண்டாவதில்லை. எல்லாச் சக்திகளையும் குறித்த பொருள்களிடமே அவர் கொடுத்துவிட்டார். அவர் எப்பொழுதும் அருட்டொழில் செய்தபடியேயிருக்கின்றார். ஆனல் அவர் செய்வது தெரிவதில்லை. ஓர் இயந்திரத்தை ஒருமுறை இயக்கிவிட்டால் அது தாமேஇயங்குகின்றது.

அவதானிக்கிறவர்களும் ஆராய்வுள்ளவர்களும் அவநம்பிக்கை யுடையவர்களும் இலகுவாய் நம்புகிறவர்களுமாகிய நாங்கள் யாவரும் இந்தப்பெரிய யந்திரத்தின் பகுதிகளா யிருக்கின்றோம். அதைவிட்டு வெளியேவந்து சாளரத்தின் ஊடாய் இப்பொறிஇயல் அறிஞரின் அலுவலகத்தை அல்லது அவருடைய இருப்பிடத்தைப் பார்க்க முடியாது இந்தப் பிரபஞ்சத்தின் அதிசயமான ஓர் பகுதியான மனிதனது நிலைமை இதுவாயிருக்கின்றது ஆகையினலே இது தானே இயங்கும் இயந்திரமா யிருக்கின்றது; இதற்கு வேருய் இதை இயக்கும் பொறி இயல் வல்லுனர் ஒருவர் இல்லை என்று மனிதருட் சிலர் சொல்வதில் நூதனமில்லை. இவ்வியந்திரம் சிறிதும் பிழையின்றி இயங்கும் சிறப்பு இவ்வித எண்ணத்தை உண்டாக்கின்றது.

மிகப் பழைய காலந்தொடக்கம் உயிர்த் தோற்றங்களின் விருத்திபற்றி எங்கள் சிந்தனையாளர் அறிந்திருக்கின்றனர். உலகத்தோற்றத்தின் பெருக்கம் சிறு விதைப் பொருள்களிலிருந்து உண்டாகலாம் என்று அகமுகமாய்ப்பார்த்து அவர்கள் கண்டிருக்கின்றார்கள். எவ்வளவு சிறியதாயிருந்தாலும் ஓர் மூலப் பொருளிலிருந்தே குறித்த உயிர்த் தோற்ற விருத்தியானது உண்டாகின்றதென்னும் உண்உண்மையைக் குறித்த உயிர்த்தோற்ற விருத்தி இல்லாமற்செய்யமாட்டாது. சத்திலிருந்தே சத்துண்டாகும். தார்வின் அவர்களின்கொள்கையை நான் பிழை என்று சொல்லவில்லை. ஆனல் பிரபஞ்சத்தின் இரகசியத்தை அது விளக்கவில்லை. சடப் பொருள்களிலிருந்து உயிர்த் தோற்றம் எப்படி உண்டானது? உயிருடைப் பொருளாயிருந்து சூழலுக்குத் தக்கவாறு வளர்ந்துவரும் பொருளானது உயிரற்ற பொருளுக்கு வேருயுள்ளது என்று அறிகின்றோம்.

சீவ வளர்ச்சிச் சாத்திரமானது இத்தொடர்பில் அறியப்படாத உண்மையை இருதுறைகளுள் தள்ளிவிடுகின்றது. அவை உயிரற்றதிலிருந்து உயிர்த்தோற்றம் உண்டாதல் (2 புது இனங்களின்வளர்ச்சிக்கேற்றநிலைமையை உண்டாக்குதற்குச் சாதகமான மாற்றங்களை உண்டாக்குதல் என்பவையாகும். இவற்றை ஏன் சொன்னேன் என்று கேட்கலாம். விழுமிய முன்னேற்றத்தை விஞ்ஞானம் அடைந்தபோதிலும் உயிர் வாழ்க்கையின் இரகசியம் அறியமுடியாததாய்த் தொடர்ந்து இரகசியம் இரகசியமாகவே இருக்கின்றது என்பதை விளக்குதற்கேயாம்.

ஆனல் [illegible] பார்த்து அது சத்தியின் கூட்டமாயே இருக்கின்றது என்று விஞ்ஞானிகள் இன்று காண்பிப்பது போல சீவ அணுவைப் பிரித்துப் பார்த்து என்ன என்ன சேர்ந்து உயிரை உண்டாக்குகின்றன என்று எதிர்காலத்திற் சொல்லக்கூடியதாய் வரலாம். அப்படி வரும்பொழுது உயிரற்ற பொருளிலிருந்து உயிர்த்தோற்றம் உண்டாகும் இரகசியத்தை வெளிப்படுத்தியாயிற்று என்று விஞ்ஞானம் விளம்பலாம். அப்படிச் சொல்லக்கூடியதாய் வந்தவிடத்தும் நாம் காண்பவற்றுள் அறியப்படாது மறைந்து நிற்கும் இரகசியப் பொருள் தொடர்ந்து என்றென்றும்போல் இரகசியமாகவே யிருக்கின்றது.

விஞ்ஞானக் காட்சிகளின் சிறப்புக்களால் கடவுள் இல்லை என்று கருதச் செய்வதாக நாங்கள மாறுபட விளங்கிவிடக்கூடாது. இந்த அதிசயங்களெல்லாம் இவற்றிலும் மேலான ஓர் அதிசயமான பொருளிலிருந்தே உண்டாயிருக்க வேண்டும். அப்பொருள் கடவுளே ஆவர்.

(சென்னைச் சர்வகலாசாலை நூற்ருண்டுவிழாவில் ஸ்ரீ சி. இராசகோபாலாசாரியாரவர்கள் நிகழ்த்திய பேருரையின் ஓர் பகுதியின் சாரம்.)

———

## தவத்திரு சாந்தலிங்கர் தமிழ்க்கல்லூரியின் சாதனை

பேரூர் தவத்திரு சாந்தலிங்கர் தமிழ்க்கல்லூரி மாணவர் 1957-ம் ஆண்டுப் பல்கலைக்கழகத்துத் தேர்தலில் 100-க்கு 100 வெற்றி அடைந்துள்ளனர் என்றும் அதில் முதல் வகுப்பும் இரண்டாம்வகுப்புநிரம்பி வந்துள்ளன என்றும் அறிகினறோம். மகிழ்வுக்குரிய இத்தகைய நல்ல நிலைமை தொடர்ந்து வளர இறைவன் திருவருள் புரிக.

———

## இலங்கை இந்தியர்பற்றி பண்டிதநேரு

———

இலங்கை முதல் மந்திரிக்கும் சமஷ்டிக் கட்சியினருக்கும் இடையில் நடந்தது சமரசப் பேச்சு. பேசப்பட்டவற்றுள் ஒன்று இலங்கை இந்தியர் நிலைமை. இந்திய மக்கள் சபையில் இலங்கை இந்தியர் பற்றிக் கேள்விகள் பல கேட்கப்பட்டன. இது பற்றி நல்லெண்ணப் பேச்சாலன்றி வேறெவ்வாற்றாலும் எதுவும் செய்ய முடியாதென்று முற்றுப்புள்ளியிட்டுவிட்டார் பண்டிதநேரு அவர்கள். எந்த ஒரு உள்நாட்டுக் கருமத்திலும் தீர்மானம் செய்யும் உரிமை ஓர் சுதந்திரநாட்டுக்குரியது என்பது அவர் கூறிய நியாயமாகும்.

## வட்டக்கோடை தமிழ் முன்னேற்றச் சங்கத் தாபகருக்கு பிரியாவிடை

———

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ரும், இப்பகுதியில் அரும் பெரும் சைவத் தொண்டாற்றிய வருமாகிய திரு. எஸ். சீவரத்தினம் அவர்கள் வேறு தோட்டத்திற்கு மாறிச் செல்வதை முன்னிட்டு இப்பகுதி வாசிகளாலும், திவ்விய ஜீவன சங்கத்தாராலும் அன்னருக்கு ஒரு பிரியாவிடை பூண்டுலுஓயா அரசாங்க தமிழ்க் கலவன் பாடசாலையில் மேற்படி பாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு, வி. முருகேசு அவர்கள் தலைமையில் நடைபெற்றது

திரு. க. கந்தையா அவர்களின் கூட்டுப்பிரார்த்தனையுடனும் திரு. எஸ் குமாரசாமி அவர்களின் யோக ஆசனப் பயிற்சியுடனும் விழா ஆரம்பமானது.

இறம்பொடை டி. எம். எம். ஓ. திரு. ரி. தம்பிநாயகம் அவர்கள் சிரித்தும் சிரியாமல் இருக்கும் திரு சி. சீவரத்தினம் அவர்களின் சைவப்பற்றையும் கூட்டுப் பிரார்த்தனையில் அவர் எடுத்துக்கொண்ட விடா முயற்சியையும் எடுத்துக் கூறினர்.

அடுத்து வட்டக்கொடை தமிழ் முன்னேற்றச்சங்கத் தலைவரும், வட்டக்கொடை புகையிரத நிலைய உப அதிபருமாகிய திரு. அ. சபாபதிப்பிள்ளை அவர்கள் பேசினர்.

"இராவணன் மேலது நீறு" என்ற தேவார அடிப்படை இலங்கேசன் ஒரு சிவபக்தன் என்பதை எடுத்துக் காட்டுகின்றது. இப் பூண்டலுஓயாவிற்கு பூர்வ புண்ணிய பயனல் ஓர் சீவரத்தினம் வந்தார். இவ்வளவு தொகையான தமிழ் மக்கள் வாழும் இடத்தில் ஓர் ஆலயம் இல்லையே என்று ஏங்கினர். பெருமுயற்சி எடுத்தார். "திவ்வியசீவன சங்கத்தை இங்கு உருவாக்கிய பெருந்தகையும் இவரே.

இப்பொழுது ஆலயத்திற்கும் கூட்டுப் பிரார்த்தனை மண்டபத்திற்கும் அஸ்திவாரக்கல்லு நாட்டப்பட்டிருக்கின்றது. அது கூடிய சீக்கிரம் வேலை முற்றுப்பெற்று ஓர் ஆலயமாகச் சிறந்து விளங்கப் போகின்றது.

பட்டம் பதவி விரும்பாது "என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்னும் பெருநோக்குடைய இப்பெரியாருக்கு நாம் செய்யும் நன்றி என்னவெனில், அன்னர் தொடங்கிய கூட்டுப்பிரார்த்தனையையும், இவ்வாலயத் திருப்பணியையும் செவ்வனே நடத்துவதுதான் என்று அவர் பேசும்போது குறிப்பிட்டார். திரு. எஸ். சீவரத்தினத்திற்கு வாழ்த்துப்பத்திரமும் வாசித்து வழங்கப்பட்டது.

## வெற்றியுமல்ல தோல்வியுமல்ல

———

தமிழரசுக்கட்சிக்கும் முதல்மந்திரி ஸ்ரீ பண்டாரநாயகவுக்குமிடையில் உண்டான ஒப்பந்தம் தமிழரசுக் கட்சிக்கு ஓர் வெற்றியுமல்ல தோல்வியுமல்ல. இப்பொழுதுள்ள நிலைமையில் பெறக்கூடியதைப் பெற்றுள்ளோம். உயர்ந்ததாயுள்ள எங்கள் குறிக்கோளை அடைதற்குச் செய்யும் முயற்சியில் இது ஒருபடி எங்களை உயர்ந்து செல்ல உதவுகின்றது. இதைக் கண்டு எல்லாம் அடைந்துவிட்டதாக நினைத்துத் தமிழ் மக்கள் சோர்வடைந்து விடக்கூடாது என்று ஸ்ரீ எஸ். ஜே வி. செல்வநாயகம் அவர்கள் மட்டக்களப்பிற் பேசும்போது கூறினர். ஆறுமாச காலத்திற்குள் இத்தொடர்பில் வேண்டப்படும் சட்டம் இயற்றப்படும் என்பதாய் முதல் மந்திரி வாக்களித்துள்ளார் என்றும் இத்தொடர்பிற் குறிப்பிட்டார்.

———

## திரு சி. சுந்தரலிங்கம் அவர்களின் எதிர்ப்பு

———

தமிழரசுக்கட்சி முதல் மந்திரியுடன் செய்த ஒப்பந்தத்தை எதிர்த்து திரு. சி. சுந்தரலிங்கம் அவர்கள் ஓர் எதிர்ப்புக் கூட்டத்தை மட்டக்களப்பில்நகரமண்டபத்துக்கணிமையில் நடத்தினர். தமிழரசுக் கட்சி மகாநாட்டிற் சமுகமாய் நின்ற பெருந்தொகை மக்கள் அக் கூட்டத்துக்குச் சென்றனர். கலகம் உண்டாயிற்று. கலகத்தையடக்கப் பாடிகாவலர் செய்த முயற்சியும் பயனற்றுப் போய்விட்டது. கற்களும் வீசப்பட்டன. கல் எறிந்த ஒருவர் கைதியாக்கப்பட்டார். நிலைமை மேலும் பழுதடைந்தமையால் திரு. சுந்தரலிங்கத்தைப் பாடிகாவலர் பலாத்காரமாக வெளியேற்றினர்.

திரு. சுந்தரலிங்கத்தின் மீது கல்விழுந்து இரத்தம் பாய்ந்தது என்று செய்தி வெளிவந்தபோதிலும் அப்படி ஒன்றும் நடக்கவில்லை என்று திரு. சுந்தரலிங்கம் செய்தி வெளியிட்டிருக்கின்ருர்.

———

## கதிர்காமம்பற்றிக் கவலை வேண்டாமாம்

———

கதிர்காமத் திருவிழாக்களின்போது கலகங்கள் ஏற்படக்கூடுமென்று நினைத்துக் கவலைப்பட வேண்டாமென்று அரசாங்க தர்மகர்த்தா ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளார். வழக்கம்போல் வேண்டிய வசதிகள் அங்கே செய்யப்படுகின்றனவாம்.

———

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Commission Sale

## விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக்கோட்டு வழக்கு இல. 5541,
தும்பளை சபாபதி ஐயர் சோம சுந்தரஐயர் —வழக்காளி.
1, தும்பளை வல்லிபுரம் தம்பிப் பிள்ளையும்
2. பெண் செல்லம்மாவும் —எதிரிகள்,

மேற் குறிந்துள்ள வழக்கில் தீர்ந்த தீர்வையின்படியும் குறித்த கோட்டார் எனக்கனுப்பிய கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ்க்காணும் ஆதனங்கள் 1957-ம் ஆ புரட்டாதிமீ 5ந் திகதி (5-9-57) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கமாக குறிதத ஆதனங்க ளிடமாக விருந்து என்னல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக், வடமராட்சிப்பகுதி:-

1, தும்பளையிறை வளலாய் ஆட்சிப்படி விலப்பரப்பு $1\frac{1}{2}$ உம், விலப்பரப்பு $5\frac{3}{4}$ஐக்கொண்ட வளலாய் என்னுங் காணிக்கு கிழக்குப்புறமாகவுள்ள விலப்பரப்பு 4 குளி 4 இல் கிழக்குப் புறமாக விலப்பரப்பு $\frac{1}{2}$ உம் ஆகக் கூடிய விலப்பரப்பு 2, தென்னைகள், கல்வீடு, சவுக்கண்டி, அடுக்களை உட்பட எல்லை கிழக்கு சுப்பிரமணியம் பெண் இலட்சுமிப்பிள்ளைக் குரியவாதனம். வடக்கு ஒழுங்கை மேற்கும் தெற்கும் பின்னல் காணும் 2-ம்காணி. இவையடங்கலும்.

2, ஷெவளலாய் இது உலாந்தா மேஸ்தர் திரு. C.கணபதிப்பிள்ளை அவர்களால் 1932-ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம், 27-ந் திகதி 5818-ம் இலக்கத்தில் தயாரிக்கப்பட்ட படத்தின்படி விலப்பரப்பு 9 குளி 14 1/32, இதில் 3-ம் இலக்கத் துண்டுக்கு விலப்பரப்பு 3 குளி 1 24/32 தென்னைகள் பனைகளுடன் எல்லைகிழக்கு இரண்டாம் எதிரிக்கும் மறுபேருக்குமுரிய வாதனம், வடக்கு இரண்டாம் எதிரிக்குரிய வாதனமும் ஒழுங்கையும், மேற்கு மேலே குறித்த படத்தின் 4-ம் 2-ம் இலக்கத் துண்டுகள், தெற்கு புண்ணியர் கணபதிப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய வாதனம். இவையடங்கலும்.

3. மேற்குறித்த படத்தின் 4-ம் இலக்கத்துண்டு குளி 8 25/32 தென்னைகள் கிணறு உட்பட எல்லை கிழக்கு மேலே சொல்லப்பட்ட 2-ம் ஆதனம், வடக்கு ஒழுங்கை, மேற்கும் தெற்கும் மேற்குறித்த படத்தின் 2-ம் இலக்கத்துண்டு இதற்குட்பட்ட கிணற்றிலும் மற்நறைகளிலும் சொரியலாய் 1/3.

தீர்வைத்தொகை: ரூ. 2123-00, 14-9-56 தொடங்கி 13-12-56 வரை ரூ. 1500க்கு $8\frac{1}{2}$சத வீத வட்டி 31-$87\frac{1}{2}$, 13-6-57 வரை ரூ. 2154-$87\frac{1}{2}$க்கு 5 சதவீத வட்டி 70-37, கோட்டுச்செலவு 201-50,
2426-$74\frac{1}{2}$.

வி. முதலியார் குழந்தைவேலு,
(கொமிஷனர்)
பருத்தித்துறை
30-7-57.
M 75 2-8-57






சைவத் தொண்டைத்

# தெய்வப் பணியாக ஆற்றிய ஸ்ரீ சிவபாதசுந்தரனுர்



1—8—57 நினைவு தினம்

## துறந்தார்பெருமை

2-ம் பக்கத்தொடர்ச்சி

பதும் எட்டாவது பாட்டில் துறந்தார துபெருமையை நிலவுலகத்தின்கண் அவர் ஆணையாக,சொல்லும்மந்திரங்களே வெளிப்படையாகக் காட்டு மென்பதையும் நன்கு வலியுறுத்தியுள்ளார்.

'சுவையொளி யூறோசை
நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே
யுலகு".

"நிறைமொழி மாந்தர்
பெருமை நிலத்து
மறைமொழிகாட்டிவிடும்"

ஒன்பதாவது பாட்டில் துறவு, மெய்யுணர்வு, அவாவின்மை முதலிய நற்குணங்களை மேற்கொண்டு குணக்குன்றின்கண் நின்ற முனிவரது வெகுளியைக் கணமேயாயினும் தடுத்தல் அரிதென்பதும், பத்தாம் பாட்டில் எல்லா உயிர்கள் மேலும் செவ்விய தண்ணளியைப் பூண்டு ஒழுகுகின்றமையால் அந்தணரென்று சொல்லப்படுவார் துறவறத்தினரென்பதும் தெளிவுபடக் கூறப்பட்டுள்ளன.

'குணமென்னுங் குன்றேறி
நின்ரர் வெகுளி
கணமேயுங் காத்த லரிது"

"அந்தண ரென்போ றவோர்
மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண் டொழுக
லான்".

## மட்டக்களப்பு-கழுதாவளை பிள்ளையார் கோயில் மகோற்சவம்

நிகழும் ஆடி மீ 16-ந் திகதி (31-7-57) புதன்கிழமை தொடக்கம் மேற்படி ஆலயத்தில் திருவிழா ஆரம்பமாகி 26-ந் திகதி (10-8-57) சனிக்கிழமை தீர்த்தோற்சவம் நிகழும். திருவிழாக் காலங்களில கூட்டுப் பிரார்த்தனை, சைவப் பிரசங்கங்கள் ஆதியன நிகழும்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக் கோட்டில்
புங்குடுதீவு மேற்கு ஆறுமுகம் சோமசுந்தரம்
வழக்காளி
இல. 11339
எதிராக
1 புங்குடுதீவு மேற்கு ஆறுமுகம் கைம்பெண் தங்கமுத்து.
2 ஷெயூர் ஆறுமுகம் சிவசாமி
3 ஷெயூர் செல்லையா நவரத்தினம்.
4 ஷெயூர் பெண் தங்கமுத்து,
எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் 11339-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1957-ம் ஹு ஆவணி மீ 26 உ திங்கட்கிழமை முற்பகல் ஒன்பது மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை முதல் வட்டி ரூபா 400-ம் அதற்கு 3-7-54 தொடக்கம் 29-3-55 வரை 5 வீதமான வட்டியும் அதன்மேல் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 75-00ம்.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி புங்குடுதீவுக் கோவிற்பற்று புங்குடுதீவு மேற்கிறை "சங்கடமும் சீமாலும் மறுபிரிவுகளும்" பர. நீ, இலா. ஐந்து 5 ஆனல் ஆட்சியின்படி பர. வி இலா எட்டு (8)வீடுகளும் கிணறும் செய்பயிர் வான்பயிர்களும் எல்லை கிழக்கு K. சோமசுந்தரத்திற்கும் சகோதரர்கட்கு முரியவாதனம், வடக்கு ஆறுமுகம் சரவணமுத்துவிற்கும் பங்காளருக்குமுரிய வாதனம் மேற்கு ஒழுங்கை, தெற்கு ஒழுங்கையும் வயிரமுத்துவுக்குகும் பங்காளருக்கும் உரிய ஆதனம், இதடங்கலும் பதிவு இல C 53/354

காரைநகர்
1957-ம் ஹு ஆடி மீ 13உ
வை. ஏரம்பமூர்த்தி
கொம்மிஷனர்
M 73 2-8-57

உ

## சைவ சித்தாந்த வகுப்பு

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாதரவில் நீண்ட காலம் சபை நாவலர் மண்டபத்தில் சித்தாந்த வகுப்பை நடத்தி வந்த பெரியார் திரு. சி. நாகையா B. A. அவர்கள் தமது உடல் நலக் குறைவால் சில மாதங்களாக ஷெ வகுப்பை நடத்த முடியாமற் போயிற்று. கடவுள் திருவருளால் அவருடைய தேகநிலை திருந்திவிட்டது. இனிமேல் சித்தாந்த வகுப்பை வழமைபோல சபை நாவலர் மண்டபத்தில் சனிக்கிழமைகடோறும் பி. ப 3 மணிக்கு ஆரம்பித்து நடத்துவார்கள். இப்பொழுது அவர் கற்பிக்கத் தொடங்கும் நூல் 'சிவஞானமாபாடியமாகும்' குறித்த வகுப்பிற் சேர விரும்புகின்றவர்கள் யாவரும் அழைக்கப்படுகின்றனர். அடுத்த சனிக்கிழமை (10-8-57) முதல் வகுப்பு ஆரம்பமாகும்.

சைவபரிபாலனசபை, யாழ்ப்பாணம், 31-7-57.
மு. மயில்வாகனம், சமயப்பிரசார அமைச்சர்.

M 72 2, 9, 16-8-57.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்
கோட்டில்
1 கரம்பன்
சின்னப்பு முருகேசு
2 ஷெயூர் பெண் மீனுட்சி
வழக்காளிகள்
எதிராக
இல. M B 1379
1 நாரந்தனை இராமலிங்கம்
சுப்பையா
2 ஷெயூர் பெண் பொன்னம்மா
3 காரைநகர் மேற்கு
K. K. கந்தையாபிள்ளை
4 வேலணை மேற்கு
M. C. சிற்றம்பலம்
எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 1379ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1957 ம் ஹு ஆவணி மீ 24 ம் திகதி சனிக்கிழமை முற்பகல் ஒன்பது மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 3141-66 சதமும் ரூபா 1750 க்கு 4-12-56 தொடக்கம் 19-6-57 வரை 15 வீதமான வட்டியும் அதன் மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவும்.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறைக் கோவிற்பற்று நாரந்தனையிறை "பத்துவாரப் புலம்" பர நீ. இல ஐந்து (5) தெற்கெல்லைக் காணியிலிருக்கும் கிணற்றில் நாலிலொருபாகமும் வழமையான வழிவாய்க்காற் பாவிப்புரித்தும் கல்வீடும் தென்னைகளும் கிணறும் எல்லை கிழக்கு சிவகுரு பெண் யோகம்மாவிற்குரியவாதனம். வடக்கு ஒழுங்கை மேற்கு ஒழுங்கை முகப்பும், அவுரும் பிள்ளை பெண் ஞானம்மாவிற்குரியவாதனமும் தெற்கு யோசேப்பு பெண் அடைக்கலமுத்துவிற்குரியவாதனம். இதன் பதிவு C 190/70.

காரைநகர்
1957-ம் ஹு ஆடி மீ 2-ந்திகதி

வை. ஏரம்பமூர்த்தி
கொம்மிஷனர்.
M 74. 2-8

## சைவம் வளர்த்த ஸ்ரீ சிவபாதசுந்தரனுர்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ருளை அல்லும் பகலும் வேண்டினர். சைவ சித்தாந்த அறிஞர்கள் வாழும் தலங்களில் ஒளிப்பிரகாசமுண்டு. சிவபாத சுந்தரப்

## பட்டினத்தடிகள் குருபூசை

நாள்: ஏவிளம்பி ஹு ஆடிமீ உருவ (9-8-57) வெள்ளிக்கிழமை.

இடம்: சைவபரிபாலன சபை நாவலர் மண்டபம்.

நிகழ்ச்சிகள்:

இரவு 7—$7\frac{1}{2}$
கடவுளாராதனை

தமிழ்மறையோதல்
ஸ்ரீமத் தி. கலியாணசுந்தரக் குருக்கள்

„ $7\frac{1}{2}$—$8\frac{1}{2}$ 'பட்டினத்தடிகள் என்னும்பொருள்பற்றிப் பிரசங்கம்

சைவப் புலவர்

திரு. த. குமாரசுவாமிப்பிள்ளை அவர்கள்

சைவாபிமானிகள் யாவரும் சமுகமளிப்பார்களாக.

மு. மயில்வாகனம்,
சமயப்பிரசார அமைச்சர்,
சைவபரிபாலனசபை,
யாழ்ப்பாணம், 2-8-57.

பெரியார் காலை மாலை நேரங்களில் ஆலய வழிபாடு செய்வார்கள். வழிபாடு செய்யும்பொழுது கோயில் வீதியில் இருக்கும் அழுக்குகளையும் நீக்குவார். உற்சவ தினத்தில் தீவர்த்திகையில் வைத்திருப்பார்கள். சந்நிதானத்தில் இருகரங்களையும் கூப்பி ஆடாமல் அசையாமல் சித்திரப் பாவை போல் அடங்கி எம்பெருமானைத் தியானிப்பர், முளங்காலிற்கு மேல் நான்குமுழ வேட்டி இடுப்பில் இரண்டு முழத் துண்டு. உச்சியில் பேர் பெற்ற சைவக்குடுமி விரததியானங்களால் மெலிந்த மேனி. நெற்றியில் திரிபுண்டரம் இத்தகைய இலட்சணங்களுடன்கந்தவனத்தில் காட்சியளித்த சிவபாதசுந்தரஐயாவின் குருபூசைத் தினம் ஆடி மீ 17 ந் திகதி (1-8-57 ல்) திருக்கேதீச்சர தலத்தில் வழக்கம்போல் நிகழவிருப்பதால் சைவமக்கள் எல்லோரும் அஞ்சலி செய்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாசிஉத்திரமே திருவள்ளுவர்......

1-ம் பக்கத் தொடர்ச்சி

மதியிலு முந்தைப் பக்கத்
தலர்கதிர் வாரத் தல்லூண்
அயின்றிடா வயலிற்
றஞ்சா.

என்று குறித்த வாய்மைக் கிணங்கும் அதி மாதத்தை சைவர்கள் நிச்சயமாய் ஒழிக்கவேண்டும் என்பதை உங்கள் போல்வாரும் ஒப்புக்கொள்ளாது போவரோ? அதிமாத தோஷம் சைவர்கட்கு உடன் பாடில்லை யென்றும் சௌர மானமே விரதாரம்பங்களுக்கு மேலான தென்றுங் கூறிக் "கொடிறும் பேதையுங் கொண்டது விடார்" என்பதற்கேற்ப நூற்பதிப்புக் கழகத்தார் மேற்கண்ட கலைமகள் திருமகள் மலைமகள் ஆதியோரைக் குறிக்கும் நவராத்திரி ஆரம்பத்தையும் திருகந்தவேளைக் குறிக்கும் கந்த சஷ்டி விரதாரம்பத்தையும் மாற்றிக் குறித்து வருகின்றனர். அன்னவர் திருவள்ளுவர் திருநாளை வைகாசி அனுஷமென மாற்றத் தயங்குவரா? எண்ணிப் பாருங்கள். ஐயகோ! அடாது செய்பவர் படாது படுவர் என அவர்கள் அறிஞர்களால் தூஷிக்கப்பட்டு வருகின்றனர். அவர்கள் போகட்டும்; மறைமலையடிகள்தான் எக்காலத்தவர் என்னில் திருநெல்வேலி (தென்னிந்திய) திரு கா. சுப்பிரமணியபிள்ளை காலத்தோடொத்தவர்தானே. பிள்ளையோ பட்டம் பதவி பெற்றவர் அடிகள் பிள்ளையிலும் உயர்ந்தவரல்லர். திருவள்ளுவநாயனுர் குருபூசையை மாசி உத்திரத்தில் நடத்தியவர் அழைப்பிதழ் வெளியிட்டவர் பிள்ளையவர்கள். அந்தக் காலத்தில் அடிகள் அந்நாளை ஏற்றிருந்தவரேயொழிய ஆட்சேபித்தவருமல்லர். வைகாசி அனுஷத்தை அடிகள் ஏற்றிருந்ததாய்ச் சொல்லுங் காலமோ அடிகள் காலஞ்சென்றபின்பேயொழிய முன்பல்ல. ஆதலால் வைகாசி அனுஷம் ஆதாரமற்ற வீண் வாதச் சொல்லேதான் என்று கூசாது கூறலாம். ஆனல் மாண்புமிக்க மாசி உத்திரமோ எனின் ஐந்தாங் குருபரனென்றும் சற்குரு நாதசுவாமியென்றும் நாவலப் பெரியாரென்றும் உலகம் போற்றும் உத்தமோத்தமப் பெரியாரால் ஆதியாய்க் குறிக்கப்பெற்றது. அதனை மறுக்க யார் வல்லார். அவர்காலத்தினும் அதற்குப் பின் இதுவரையும் அவரை ஒப்பார் ஒருவர் இருந்ததாக எவரும் சொல்லமுடியாது. அப்படி இருந்ததுமில்லை. ஆதலால் நாவலர் நவின்ற நன்னாளாம் மாசி உத்திரத்திலேயே திருவள்ளுவ நாயனர் குருபூசையைக்கொண்டாடி குருவருள் பெறுவோம் வாரீர்! எல்லீரும் வருக வருக வென்றழைக்கின்றேன்.

திருவள்ளுவநாயனுர் திருவடி
தொழுதேத்தும்,

சிவசூரியநாராயணன்,
பஞ்சாங்க கணிதர்,
இட்டமொழி.
திருநெல்வேலி,
தென்னிந்தியா.

## அல்லைப்பிட்டிக் கிராமச்சங்கத் தலைவர்

சென்ற இருபத்தைந்து ஆண்டுகளாக அல்லைப்பிட்டிப் பகுதிக்குக் கிராமச்சங்கத் தலைவராகக் கடமையாற்றிய திரு. கணபதிப்பிள்ளை கைலாசபிள்ளை ஜே பி. அவர்கள் இம்முறையும் தலைவராகப் போட்டி யின்றித் தெரிவு செய்யப்பெற்றிருக்கின்ருர்.

## ரஸ்தா போக்குவரத்து அறிவித்தல்

—0—

### 1957-ல் நடைபெறும் நல்லூர்க் கந்தசாமி கோவிலின் வருடாந்திர உற்சவ விழா

மேற்படி விழாவின் நிமித்தமாக, 1957 ஆகஸ்ட் 1-ம் திகதி தொடக்கம் ஆகஸ்ட் 26ம் திகதி வரை உட்பட்ட நாட்களில் கீழ்க்கண்ட ரஸ்தாக்கள் யாவும் சகலவித வாகனப் போக்குவரத்துக்களுக்கும் மூடப்பட்டிருக்கும்.

1. அரசடிச் சந்திக்கும் 2-வது மைல் கல்லுக்கு மிடையிலுள்ள பருத்தித்துறை ரோட்டின் அந்தப் பகுதி.

2. பண்டாரக் குளம் ஒழுங்கைக்கும் சோமசுந்தரம் ஒழுங்கைக்கும் இடையிலுள்ளகோவில் ரோட்டின் அந்தப் பகுதி.

**வாகனங்கள் பிரிந்து செல்லல்**

வாகனப்போக்குவரத்துகளின் சாரதிகள் கீழ்க்காணும் பாதைகளில் செல்லுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிருர்கள்.

1, யாழ்ப்பாணத திசையிலிருந்து கோப்பாய் நோக்கிப் போகும்போது (அல்லது எதிர்த் திசையில்) நாவலர் ரோட், நல்லூர் குரஸ் ரோட் முதலியனவற்றில் செல்லுதல் வேண்டும்,

2. அரசடி ரோட் வழியாக கோப்பாய் நோககிப் போகும் போது (அல்லது எதிர்த் திசையில்) வைமன்ரோட், நாவலர் ரோட், நல்லூர் குரஸ் ரோட் முதலியனவற்றில் செல்லுதல் வேண்டும்.

**வாகனங்களை நிறுத்திவைத்தல்**

வழிபடுவோரின் வசதியை உத்தேசித்து, வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கான மூன்று இடங்கள் ஒதுக்கி வைக்கப்படும். மேலும் இவ்விடங்களை நன்கு பாவிக்குமாறு சாரதிகள் அனைவருக்கும் சிபார்சு செய்யப்படுகின்றது.

மேற்படி இடங்களாவன:

1. அரசடி ரோட் ஊடாக கந்தசுவாமி கோவிலுக்கு வரும் வாகனங்களை அம்மன் கோவில் மைதானத்தில் நிறுத்தலாம்.

2. தென்பகுதியிலிருந்து கோவிலுக்கு வரும் வாகனங்களை கைலாசபிள்ளையார் கோவில் மைதானத்தில் நிறுத்தலாம்,

3, கோப்பாய் திசையிலிருந்து கந்தசுவாமி கோவிலுக்கு வரும் வாகனங்களை முத்திரைச் சந்தை மைதானத்தில் நிறுத்தலாம்,

ஒப்பம்:
ஹரி கே. வன்டன் ட்ரீசன்
போலிஸ் அத்தியக்ஷகர்,
வடமாகாணம்.

போலிஸ் காரியாலயம்,
யாழ்ப்பாணம், 1957 ஜுலை 26.
M. 71 2-8-57.

## பல்கலைக்கழகத்துக்கு அரசாங்க உதவி

நாம் தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கம் ஆரம்பித்து விட்டோம் என்பதனுல் இந்நாட்டின் பிள்ளைகளுக்கு அரசாங்கம் உயர்தரக்கல்வி கொடுக்க வேண்டிய பொறுப்பைக் குறைத்துவிடுவோமென்பதாகமாட்டாது. நாங்கள் உத்தேசித்திருக்கும் பல்கலைக் கழகத்துக்கு அரசாங்கம் நிதி உதவி தந்தேயாகவேண்டும். இது சம்பந்தமாய் எங்கள் சபையார் முதல் மந்திரியை விரைவிற் சந்தித்துப் பேசத் தீர்மானித்திருக்கின்றனர் என்கின்ருர் சேர். கந்தையா வைத்தியநாதன்.

# உங்கள் நக்ஷத்திரம்? எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

[ இவ்வாரப் பலன்கள் 4—8—57 —— 10—8—57. ]

**மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.**

ஞாயிறு திங்களும் செவ்வாய் காலையும் தொந்தரவானவையாயிருக்கும். தேகசுகம் நல்லாயிருக்கமாட்டாது. வயிற்றுக் கோளாறுகளுக்கும் மன அமைதியின்மைக்கும் இடமுண்டு, குடும்பக் குழப்பங்களுக்கும் இடமுண்டு. வார இறுதியில் இனத்தவர்கள் உமக்குச் சிறிது கோபமுண்டாக்கக்கூடும்,

**இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,**

முதல் இரு நாட்களும் புதுக் கருமங்களுக்கு நல்லவையாகும், செவ்வாய் பிற்பகல் புதன் வியாழன் கவனமாய்க் கழிக்கப்படவேண்டும். வாரமிகுதி திரும்பவும் நன்ருகும்.

**மிதுனராசி மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3, 1ம் பாதம்.**

இந்தவாரம் ஒரு அளவுக்கு நல்லாயிருக்கும்- திங்களின் பின் உம்முடைய சொந்தக் கருமங்களில் சில திருத்தங்களைக் காண்பீர். காணிகள் காணிப்பொருள்கள்மூலம் இலாபங்களுக்கிடமுண்டு. ஆனல் கடைசி இரு நாட்களும் கவனமாய்க் கழிக்க வேண்டும்.

**கடகராசி புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்,**

சுகவீனங்களுக்கிடமுண்டு. உமக்கு மனச் சமாதானமிருக்கமாட்டாது. நண்பர்களுடன் சண்டைக்கும் பிழை எண்ணங்களுக்கும் இடமுண்டு, புது முயற்சிகள் தாமதிக்கப்படும். இரகசியப் பகைவரைப்பற்றி எச்சரிக்கையாயிருக்கவும்.

**சிங்கராசி மகம், உத்திரம் பூரம், 1ம் பாதம்.**

பணத்துறையில் நல்ல வாரம். நண்பர் அதிக உதவியாயிருப்பர். ஆனல் இனத்தவர்களுடன் சண்டைகளுக்கிடமுண்டு. உம்முடைய உத்தியோகக் கருமங்களில் நீர் மிகவும் கவனமாயிருக்கவேண்டும்,

**கன்னிராசி உத்திரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.**

நண்பர் மூலம் இலாபங்களுக்கு அறிகுறிகளிருக்கின்றன ஆனல் சுகவீனங்களுக்கிடமுண்டு. கண்நோய்க்கிடமுண்டு. உத்தியோகத்துறையில் நல்ல வாரம் ஆனல் மனச் சமாதானமிருக்கமாட்டாது

**துலாம், சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.**

குடும்பக் கருமங்கள் இந்த வாரம் குழப்பமாயிருக்கும். உம்முடைய உத்தியோக கருமங்களிலும் நீர் அதிக கண்டனங்களை முன்னிடவேண்டி வரும், செலவதிகரிக்கும்,

**விருட்சிகராசி விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.**

பிதாவழி இனத்தவர் இந்த வாரம் உமக்குச் சில தொந்தரவுகளை உண்டாக்கக்கூடும். மனச்சலனங்களுக்கிடமுண்டு. உத்தியோக சித்தியும் நிச்சயம், ஆனல் சில ஆரம்ப இடைஞ்சல்களிருக்கும்.

**தனுராசி மூலம் பூராடம் உத்தராடம் 1ம் பாதம்,**

உமக்கு இந்தவாரம் மனச்சமாதானமிருக்கமாட்டாது. புது முயற்சிகள் தாமதிக்கப்படும், கந்தோரில் தொந்தரவுகளுக்கிடமுண்டு. தேகசுகம் சிறிதும் நல்லாயிருக்கமாட்டாது.

**மகராசி உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.**

குடும்பக் குழப்பங்களுக்கிடமுண்டு. நீர் விரைந்து கோபிப்பீர். நண்பர்களிடையில் பிழை எண்ணங்களுக்குமிடமுண்டு. பணத்துறையில் நல்ல வாரம். ஆனல் மேலதிகமான செலவுக்குமிடமுண்டு,

**கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,**

குடும்பக் கருமங்கள் அதிகம் நல்லாயிருக்கமாட்டா, பிழை எண்ணங்களுக்கிடமுண்டு, அவமானங்களுக கிடமில்லாமலில்லை. பணத்துறையில் நல்லவாரம், உத்தியோக சித்திக்கும் இடமுண்டு,

**மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி**

நீர் இந்த வாரம் இடைஞ்சல்களிலிருந்து நீங்கக்கூடியதாயிருக்கும் புது முயற்சிகள் மெல்லென ஆனல் திடமாக முன்னேறும். நடுவாரத்தில் கோளாறுண்டாக்குவோரைப்பற்றி எச்சரிக்கையாய் இருக்கவும். குடும்பச் சுகமும் அதிகம் திருப்தியாயிருக்கமாட்டா.

யாழ்ப்பாணம்

# ஐக்கிய இலாபநிதி

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா
616313,00
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிருப்பர்

Std 14

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணூர்பண்ணை காங்கேசன் துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர் வீதி 245-ம் இலக்கத்தில் வசிக்கும் திரு, சுப்பையா பொன்னம்பலம் கந்தையாஅவர்களால் 2-8-57 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org